

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப் படவேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் காணொலி காட்சி வாயிலாக கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது கூடுதல் தலைமைச் செயல முனைவர் எம். சாய் குமார், பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.முத்துக்குமரன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு பெரியார் மண்! 'அனைவருக்கும் அனைத்தும்' தரும் சமூகநீதி மண்!

பொய்யும், ஒப்பனையும், கற்பனையும் ஒருபோதும் நீடிக்காது, நிலைக்காது!

ஆளுநர் ஆர்.என்.ரவியின் குற்றச்சாட்டிற்கு கி.வீரமணி பதிலடி அறிக்கை!

சென்னை, நவ. 27 - தமிழ்நாடு பெரியார் மண்! 'அனைவருக்கும் அனைத்தும்' தரும் சமூகநீதி மண்! பொய்யும், ஒப்பனையும், கற்பனையும் ஒரு போதும் நீடிக்காது, நிலைக்காது! ஆளுநர் ஆர்.என்.ரவியின் குற்றச்சாட்டிற்குத் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பதிலடி அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் ஆளுநராக - தமிழ்நாடு தி.மு.க. அரசிற்கு சதா தொல்லைக் கொடுத்து, அவதூறு பரப்பி, சட்டப்பேரவை மாண்பைக் குலைத்து, ஜனநாயக மரபுகளைச் சிதைத்து, 'தானடித்த மூப்பாக' நடந்து, ஒரு போட்டி அரசினை நாளும் நடத்திக் கொண்டுவரும் ஆர்.என்.ரவி அவர்கள் அரசு சம்பளத்தை (மக்கள் வரிப் பணம்) வாங்கிக் கொண்டு, அறிவிக்கப்படாத ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. பிரச்சாரச் செயலாளர் போலவே நடந்துகொள்வது, அந்தப் பெரிய பதவியின் தன்மைக்கே மிக, மிக மிகக் கேவலமாகும்!

ஒவ்வொரு நாளும் தனது ராஜ்பவனை ஒரு தனி அக்கிரகாரம்போல ஆக்கி, ஆதாரமற்ற, ஜமுக்காளத்தில் வடிகட்டிய, கலப்படமற்ற பொய்களைப் பரப்பி வருகிறார் - இதற்கு 'மேலிட' ஜாடை காரணமாகவும், ஊடகங்கள், கார்ப்பரேட் முதலாளிகளின் கை ஆயுதங்கள் என்பதாலும், ஊடக ஒத்து ஊழைப்பும், விளம்பரமும் பெற்று வருகிறார்!

'இனமலர்' நாளேடு அவரது அதிகாரப்பூர்வ கெசட்!

'கீறல் விழுந்த கிராமஃபோன் தட்டுக்குரல்' போல... இதுவரை கேள்விப்பட்டிராத ஒரு செய்தித் தொலைக்காட்சிக்குப் (அது தேர்தல் காலத்தில் தேவைப் பூர்த்திக்கென தொடங்கப்பட்ட ஒன்றாக இருக்கக் கூடும்) பேட்டி என்ற பெயரில், முன்பு கூறிய அரைவேக்காட்டுத்தனமான - 'கீறல் விழுந்த கிராமஃபோன் தட்டுக்குரல்' போல, திரும்பத் திரும்பத் தனி ஆவர்த்தனத்தை, தினமும் செய்து வருகிறார்! உளுத்துப் புளித்துப்போன அவரது சில குற்றச்சாட்டுகளைத் தமிழ்நாடு அரசு, திராவிடர் இயக்கம், 'திராவிட மாடல்' அரசுமீது கூறியுள்ளதைப் படியுங்கள். முன்பு அரைத்த மாவு தான், மீண்டும் அரைத்துள்ளார்.

"திராவிடர் ஒரு தனி இனம் என்கின்றனர். தமிழ் மொழி, மற்ற மொழிகளுடன் தொடர்பு இல்லாதது என்று கூறுகின்றனர். இவை அனைத்தும், அய்ரோப்பிய சிந்தனைகளால் விதைக்கப்பட்டவை.

ஜெர்மன் நாஜியின் இனக் கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட கருத்து."

இது சரியானதா? அட, அறிவின் கொழுந்தே, அரசியலின் பிரகஸ்பதியே, மனுதர்ம சாஸ்திரத்தின் 10 ஆம் அத்தியாயம், 44 ஆவது சுலோகம் கூறுவதென்ன?

அம்பேத்கர் வரைந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பதிலாக, நாட்டின் மூலாதாரச் சட்டமாக மனுதர்மமே வரவேண்டும் என்று இன்றும் சிறிதுகூட அறிவுத் தெளிவின்றி கூறி வருகிறதே ஆர்.எஸ்.எசும்., அதன் அரசியல் ஆளுமையான பா.ஜ.க.வும், அந்த மனுதர்ம சாஸ்திரத்தின் 10 ஆம் அத்தியாயம், 44 ஆவது சுலோகம் கூறுவதென்ன?

ஆர்.என்.ரவி அவர்களே, படியுங்கள்!

"பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போசம், யவநம், சகம், பரதம், பால்ஹீகம், சீநம், கிராதம், தநதம், கசம் - இத்தேசங்களை யாண்டவர்கள் அனைவரும் மேற்சொன்னபடி சூத்திரராய்விட்டார்கள்"

"திராவிடம் வேறு; பாரதம் வேறு" என்று நாங்கள் சொல்லவில்லை; மனுஸ்மிருதி அல்லவா கூறுகிறது!

ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரப் பிரமுகர் அவர்களே, இதுவும் வெள்ளைக்காரன், நாஜி ஹிட்லருக்குப் பிறகு அச்சடிக்கப்பட்ட மனுஸ்மிருதியா?

'நாட்டுப் பண்' பாடலும் வெள்ளைக்காரன் மொழியா?

நாளும் நீங்கள் எழுந்து நின்று மரியாதை காட்டவேண்டிய 'தேசிய கீதம்', ('நாட்டுப் பண்' என்று கூறினால், உங்களுக்குப் பிடிக்காது என்பதால்) பாடப்படுகிறதே!

அதில் வங்க மொழிக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களது பாடலில், "திராவிட, உத்கல வங்கா" வருகிறதே, அதுகூட வெள்ளைக்காரன் மொழியா? கிழக்கே உள்ள வங்கம் எப்படி பற்பலப் பகுதிகளையும் இப்படி இணைத்துக் கூறுகிறது?

'திராவிட' கால்டுவெல் காலமும், மனுதர்ம சாத்திரக் காலமும் ஒன்றா? முந்தையதா? 'தனித்து இயங்கும் தன்மை தமிழுக்கு உண்டு!

தமிழே ஞாலத்தின் பண்டு' என்று புரட்சிக்கவிஞர் கவிதை பாடியது பிரிவினையா?

சமஸ்கிருதம் முன்னே இருந்த மூத்த மொழியா? 'பிராகிருதம்' என்பது சமஸ்கிருதத்திற்கு முந்தையதா, இல்லையா?

'சமஸ்கிருதம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

'நன்றாக சமைக்கப்பட்டது' என்ற பின்னால் சரிபார்த்து உருவாக்கப்பட்டதா? தமிழுக்கு அப்படிப்பட்ட நிலை - வரலாறு உண்டா?

பீகார் தொழிலாளர்பற்றி 'ஹிந்தி' யூடியூப் ஒன்று, தமிழ்நாடு அரசின்மீது பரப்பிய அவதூறுக்கு நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்ட கதை மறந்து விட்டதா? ஒன்றிய அமைச்சர் ஒருவர், வழக்கிலிருந்துத் தப்பிக்க மன்னிப்புக் கேட்டாரே!

பீகார் சமூகநீதியாளர்களுக்கு பெரியார் - திராவிட இயக்கப் பற்றாளர்களுக்கு வரவேற்புத் தந்தது தமிழ்நாடு!

மண்டல் கமிஷன் பரப்புரையாளர்களான பீகார் தலைவர்கள் - பி.பி.மண்டல் உள்பட, விஜயப் பிரகாஷ் நாராயணன், கர்ப்பூரி தாக்கூர், டி.பி.யாதவ், ராம்விலாஸ் பஸ்வான் - தமிழ்நாட்டின் செல்லப் பிள்ளைகள்போல வந்து செல்லும் பீகார் சமூகநீதியாளர்களுக்கு பெரியார் - திராவிட இயக்கப் பற்றாளர்களுக்கு வரவேற்புத் தந்தது தமிழ்நாடு.

லாலுபிரசாத்துக்கென ஒரு தனிப் பேராதரவு - கைநீட்டி அவரது சமூகநீதிக் கொள்கையை வரவேற்றவை தமிழ்நாடும், திராவிடர் இயக்கமும் தானே! இப்படி எத்தனையோ கூறலாம்!

வெறுப்பு அரசியல் ஆர்.எஸ்.எஸ்.சுக்கே உள்ளது!

ஹிட்லரின் நாஜி 'ஸ்வஸ்திக்' சின்னம் தானே முதலில் ஆர்.எஸ்.எஸ்.சின் சின்னம்.

முசோலினியைச் சந்தித்த தலைவர் எந்த மதத்தவர்? எந்த அமைப்பைச் சார்ந்தவர்?

இப்படி உண்மைகள் உலா வரச் செய்யவேண்டுமா?

பெரியார் மண், 'அனைவருக்கும் அனைத்தும்' தரும் சமூகநீதி மண்!

இப்படிப் புளுகு மூட்டைகளை வைத்து, அற்ப அரசியல் - ஆதாரமில்லா - முரண்பாடுகளை முன்வைக்கும் முக்காட்டு அரசியல் முகமூடி தமிழ்நாட்டில் கழன்று விடுவது உறுதி.

பொய்யும், ஒப்பனையும், கற்பனையும் ஒருபோதும் நீடிக்காது, நிலைக்காது!

இவ்வாறு கி.விரமணி தெரிவித்துள்ளார்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நல உதவிகள் வழங்கினார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள

கூட்டாட்சியியலை நிலைநிறுத்துவதற்கு தேவையானவற்றை மேற்கொள்வோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 27-

இந்த அரசியலமைப்புச் சட்ட நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

இந்தியா என்பது ஒரு பண்பாட்டுக்கோ ஒரு கருத்தியலுக்கோ மட்டுமானதல்ல, அதன் மக்கள் அனைவருக்குமானது. பாபாசாகேப் அம்பேத்கரின் இந்த பரந்த பார்வையைச் சுருக்க முயற்சிக்கும் அனைத்து சக்திகளுக்கும் எதிராகப் போராடும் நமது மனவுறுதியை இந்த அரசியலமைப்புச் சட்ட நாளில் மீண்டும் உறுதிகூறுகிறோம்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கூட்டாட்சியியலை நிலைநிறுத்தவும், அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கவும் தேவையான அனைத்தையும் மேற்கொள்வோம்.

நமது அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து நமது குடியரசைக் காப்பதே அரசியலமைப்புச் சட்டத்துக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்..



WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:
JUSTICE, social, economic and political;
LIBERTY of thought, expression, belief, faith and worship;
EQUALITY of status and of opportunity; and to promote among them all;
FRATERNITY assuring the dignity of the individual and the unity and integrity of the Nation;
IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

குஜராத்திகளுக்கு இந்திமொழி வெளிநாட்டு மொழியாகும்!

குஜராத் உயர்நீதிமன்றம் அறிவிப்பு!

அகமதாபாத், நவ.27-

குஜராத் மாநில மக்களுக்கு இந்தி மொழி அந்நியமொழி (வெளிநாட்டு மொழி) என்று குஜராத் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநில அரசு நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் கூட குஜராத் மொழிதான் கற்பிக்கப்படுகிறது என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தி மொழியில் அறிவிக்கை ஒன்றை வெளியிட்டதை எதிர்த்து ஜுனாகந்த் விவசாயிகள் தொடர்ந்த வழக்கில் நடைபெற்ற விவாதத்தின் போது மேற்கண்ட கருத்தை உயர்நீதிமன்றம் வெளியிட்டது.

2006 ஆம் ஆண்டு இந்திய. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஏற்கனவே உள்ள இருவழிப்பாதையை 4 வழிப்பாதையாக மாற்ற திட்டமிட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் பைபாஸ் பாதை கடந்த ஆண்டு மாற்றப்பட்டது.



THE TIMES OF INDIA
CITY

Hindi is a foreign language for Gujaratis, says Gujarat high court

TNN | Jan 1, 2012, 05.34 AM IST

AHMEDABAD: The Gujarat high court has said that Hindi is a foreign language for Gujaratis. Even the state government-run primary schools teach in Gujarati, the court said.

The high court made the observations in a case filed by farmers from Junagadh objecting to the National Highways Authority of India (NHAI) publishing a notification in Hindi. In 2006, the NHAI planned to widen the existing two-lane national highway 8D to four lanes. The alignment of the bypass was changed last year on various grounds.

எஸ். புவனேஸ்வரி - எஸ்.ஹரி கிருஷ்ணன் ஏற்பாட்டில்

சைதை 170 -வது வட்டம் கோட்டூர்புரத்தில் அறுசுவை உணவு

இரா.துரைராஜ் - க.மணி - கோ.சண்முகம் வழங்குகின்றனர்

சென்னை, நவ. 27 - தமிழகத்தின் எதிர்காலம் இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் "உதயநிதி" அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைபடி இன்று (27.11.2025 வியாழக்கிழமை) பகல் 12.00 மணி அளவில் 170, வது வட்டத்தில் கோட்டூர் புரம் 128 குடியிருப்பு A. பிளாக் அருகில், S. புவனேஸ்வரி (மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்) S.ஹரி கிருஷ்ண (பிரசாத் வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆகியோரது ஏற்பாட்டில், கோட்டூர்புரம் வாழும் பொது மக்களுக்கு அறுசுவை உணவினை பகுதிச் செயலளார் - 13வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ் , 170,வது வட்ட செயலாளர் கோட்டூர்புரம் கோடடூர் புரம் க.மணி 170,வது "அ" வட்ட செயலாளர் கோட்டூர் கோ. சண்முகம் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஜெ. சலாம், என். பாபு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் 170 வது வட்டத்தில் உள்ள வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள் அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டகழக செயற்குழு உறுப்பினர்கள் வட்ட இளைஞர் அணியினர் மாணவர் அணியினர் BLA2, BLC, பாக முகவர்கள், BDA தகவல்தொழில்நுட்ப அணியினர், இளைஞர் அணி பாக அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
E 277	த.பொ. / செ / வடக்கு	Proc. of 11 KV AB Switch & 11 KV HG Fuse unit with composite polymer insulator for single pole structure
54	மே.பொ. / செங்கல்பட்டு	MS 5 feet V cross arm
55	மே.பொ. / செங்கல்பட்டு	MS 3 feet 6 inch V cross arm
ENQ No.72	மே.பொ. / காஞ்சிபுரம்	Supply of Transformer Structure Materials for 9 Mt PSC Pole

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tnpdcl.org, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in**

செ.ம.தொ.இ/6340/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
259	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Hard Broken stone ballast 40 mm size for Railway track
261	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Distance piece assembly for mill top side in Unit-III
262	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Distance piece assembly for mill top side in Unit-I
264	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Distance piece assembly for mill top side in Unit-II
265	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Distance piece assembly for fuel inlet corner 2 in Unit-III
266	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Distance piece assembly for fuel inlet corner 2 in Unit-II
267	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1	Brushable Ceramic Epoxy material for cooling water pump 3A discharge line pipe of Unit-III
60	மே.பொ / இ / வ.செ.அ.மி.நி-1	Carrying out the Operational works at 230 KV Switch Yard and 66 KV Switch gear works Contract
61	மே.பொ / இ / வ.செ.அ.மி.நி-1	Dredging the deposited silt slush from the Fore bay of cooling water Pump House at NCTPS I
116	மே.பொ / இ / வ.செ.அ.மி.நி	NCTPSI SEMII Circle AHP Dn Unit I II III Outsourcing of Operation and Maintenance of PDFAC System

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/6347/ஒப்பந்தப்புள்ளி/2025

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கரூர் வாசுகி முருகேசன்
நவம்பர் 27 (2009)

கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பெருநகர சென்னை மாநகராட்சி
மத்திய வட்டாரம் / இயந்திர பொறியியல் துறை

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களால் குறுகிய மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது (ஒப்ப விதிகளின்படி)

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1 / 401, 402, 403, 404 & 405 / 2025

மண்டலம்-06 முதல் 10 வரையிலான, லாரி நிலையங்களுக்கு 330 நாட்களுக்கு கண்காணிப்பு வாகனங்களை (Enforcement Vehicle) இயக்க 54 எண்ணிக்கையிலான ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் (5 ஒப்பங்கள்)

பணியின் மதிப்பு : குறைந்த பட்சம் **ரூ.36,59,220/-** முதல் அதிகபட்சம் **ரூ.48,79,000/-** வரை
முன் வைப்புத் தொகை : குறைந்த பட்சம் **ரூ.37,000/-** முதல் அதிகபட்சம் **ரூ.49,000/-**

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **05.12.2025 மதியம் 3.00 மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **08.12.2025 மதியம் 3.30 மணி**
மேலும் விபரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

செ.ம.தொ.இ / 6354 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (மத்தியம்)**